1971 அக்டோபர் 23]

மழை இல்லாவிட்டால் அதன் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அப்போது தெர்மல் பவர் கொடுக்க வேண்டிய நிலேயும் வருகிறது. இதை யெல்லாம் மனதில் வைத்து இந்த கமிட்டி பரிசிலனை செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சரவர்கள் பதில் கூறுகிறபோது மின்சாரத் தையே மூலப்பொருளாக பயன்படுத்துகிற தொழிற்சாலைகளுக்கு குறைந்த கட்டணத்தில் கொடுப்பதாக ஒப்பந்தம் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு மிக லாபகரமாக நடக்கிற தனியார் துறை தொழில்களேயே பொதுத்துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சோஸலிசம் பேசுகின்ற நேரத்தில் பொதுப்பணத்தை எடுத்து தனியார் லாபமடையக்கூடிய நிலேயை உண்டாக்குகிறோமே, இந்த முரண்பாடுகளே மாற்ற அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதில் ஒன்றும் முரண்பாடு இருப்பதாகத் தெரியவில்லே. இப்படி ஒரு சலுகை அளிக்கப்படாது போனல் தொழிற்சாலே களே மூடவேண்டியதாக இருக்குமே தவிர, வேறு வழியில்லே. யாரோ தனி நபர் லாபம் சம்பாதிப்பது என்பது இல்லே. லாபத்தில் நமக்கும் பங்கு உண்டு, நமக்கும் அந்த ஸ்தாபனத்தில் உரிமை உண்டு.

காட்டு எருமைகள் வளர்ப்பு

*44 வின.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டுக் காடுகளில் "காட்டு எருமை"களே வளர்க்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

Joint Directors for State Transport Department

*45 Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether there is any proposal to appoint regional Joint Directors in the State Transport Department to speed up the efficiency in the administration ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) & (இ) : தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையின் நிர்வா கத்தை சீரமைத்துத் திறன் மிக்கதாய்ச் செய்யும் நோக்குடன், அரசு இம் மாநிலம் முழுவதும் கீழ்காணும் நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

(1) கன்னியாகுமரி வட்டாரம் : இவ்வட்டாரம் நாகர் கோயிலில் தலைமை யிடத்துடன் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களேக் கொண் டிருக்கும்.

(2) **திருச்சிராப்பள்ளி வட்டாரம் :** இவ்வட்டாரம், திருச்சிராப்பள்ளியில் தலைமையிடத்துடன் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், தென்னாற்காடு, மதுரை மாவட்டங்களைக் கொண்டிருக்கும்.

(3) **சென்னை வட்டாரம் :** இவ்வட்டாரம், சென்னையில் தலைமையிடத்துடன் சென்னை மாநகரம், செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களைக் கொண்டிருக்கும்.

(4) **சேலம் வட்டாரம் :** இவ்வட்டாரம் சேலத்தில் தலைமையிடத்துடன் சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களைக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு வட்டாரமும் மாவட்ட வருவாய் அதிகாரியின் தரத்தில் உள்ள ஒரு இணை இயக்குநரின் பொறுப்பிலுள்ளது. நான்கு வட்டாரங்களுக்கும் நான்கு இணை இயக்குநர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். வட்டார இணை இயக்குநருக்கு உதவியாக நிர்வாகப் பொறியியல் தரத்தில் துணை இயக்குநரும் அரசிதழ் பதிவு பெற்ற நேர்முக உதவியாளரும் போக்குவரத்து காண்காணிப்பாளரும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

Dr. H. V. HANDE : Sir, the Hon. Minister in his reply has given us some idea about how he is going to reorganise the State Transport. But is the Hon. Minister aware that since 1st October on almost every point, there is an increase in the bus fares of the State Transport. For instance, from Avadi to Madras City was 60 paise and now it is 85 paise. So also from Avadi to Ambattur it was 15 paise and now it is 30 paise. Likewise, from Parrys to Aminjikarai and other routes, there has been an increase in fares. Is this the manner in which the reorganisation of the State Transport Department is taking place ? Also may I know whether the Government will restore the old fares ?

The Hon. Thiru S. RAMACHANDRAN : The original question relates to the reorganisation of the Transport Department which has already been done. The hon. Member's question relates to the revision of fares and that can be taken up separately as the hon. Member also has given notice of a calling attention motion.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தை நான்கு வட்டாரங்களாகப் பிரித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி வட்டாரத்திற்குள் மதுரை இருக்கிறது. மதுரை ஒரு தனி வட்டாரமாக அமைக்கப்பட வேண்டுமென்றும், அங்கே ஒரு ஜாயிண்ட் டைரக்டர் இருக்க வேண்டுமென்றும் சில முறையீடுகள் அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி பிரிக்கின்ற நேரத்தில், ஏதாவது ஒரு இடத்தில் பஸ் வழியில் நின்றுவிட்டால், ரிப்பேராகிவிட்டால், அந்த வட்டாரத்திலிருந்துதான் ஸ்பேர் பஸ் வர வேண்டுமென்கிற நிலைமை இருக்கிறது. அதில் பெரிதும் காலதாமதமாகிறது. ஆகவே, மதுரையை தனி வட்டாரமாக அமைத்து, டிப்போ சூப்பரண்டெண்டிற்குப் பதிலாக ஜாயிண்ட் டைரக்டரைப் போட்டு, மதுரையிலிருந்து எல்லா இடங்களுக்கும் பஸ்கள் போகலாம் என்கிற ஏற்பாட்டைச் செய்வதற்கு ஏதாவது ஆலோசனை இருக்கிறதா ?

1971 அக்டோபர் 23]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த வட்டாரங்கள் ஏற்கெனவே பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள மதுரையைப் பொறுத்தவரையில் அண்மையில் நிறைவேற்றப்படவிருக்கின்ற மசோதாவின்மூலம் மதுரையில் ஒரு கம்பெனியை நிறுவ இருக்கின்ற காரணத்தால், அவர் சொன்ன கஷ்டங்கள் இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளி குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) முதலமைச்சர்கள் மாநாட்டில் மாநிலங்களில் கூடுதல் வரி விதிக்க முதலமைச்சர்கள் இசைவுத் தெரிவித்ததாக கூறப்படுவது குறித்து.

DR. H. V. HANDE: Sir, on a point of information. Recently the Chief Ministers' Conference was held and in the newspapers it is stated that certain taxes are going to be raised by the States and the Chief Ministers have agreed to it. I do not know how far it is correct. As the Hon. Chief Minister has not made any statement, will it be possible for him to tell this House as to what exactly transpired in that Conference and whether any assurance has been given to the Prime Minister that extra resources would be mobilised in the State?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அக்டோபர் 12-ம் நாளன்று டெல்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மாநாட்டிற்குத் தலைமை வகித்த மத்திய அரசினுடைய நிதியமைச்சர் திரு. சவான் அவர்கள் முதலமைச்சர்களிடத்திலே, இன்றைக்கு ஏற்பட்டுள்ள இந்திய அரசியல் சூழ்நிலைகளையெல்லாம் விரிவாக எடுத்துரைத்து இந்தச் சூழ்நிலையில் வங்கத்து அகதிகளை சமாளிக்க வேண்டிய பெரும் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, இவைகளையெல்லாம் ஈடுகட்டுவதற்கு இன்றைக்கு உள்ள பொருளாதார சூழ்நிலை மிகுந்த நெருக்கடியாக இருக்கிறது என்பதையும் எடுத்துரைத்து, அதற்கேற்ற வகையில் சில வரிகளைப் போட வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே தமிழ் நாடும் மற்ற மாநிலங்களும் பொதுவாக இந்திய பூபாகத்து மக்களும் எடுத்துக் கொண்டிருக்கிற உறுதிக்கேற்ப, இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு நாம் எல்லா வகையான தியாகங்களையும் தேச நலனை முன்னிட்டுச் செய்ய வேண்டிய அடிப்படையில் எல்லா முதலமைச்சர்களும், இது போன்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்திய அரசு மீள்வதற்கும், வங்கத்து அகதிகளை அவர்களுடைய வாழ்க்கையைப் பரிதாபகரமான சூழ்நிலையிலிருந்து காப்பாற்றுவதற்கும் ஏற்ற வசதிகளை இந்திய அரசு எடுப்பது பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லையென்று எல்லா முதலமைச்சர்களும் மத்திய நிதியமைச்சர் திரு. சவான் அவர்களிடத்தில் உறுதி அளித்தோம். அப்போது, 'சில வரிகள் போட வேண்டியிருக்கும்' என்கிற அளவில் மாத்திரம் நிதியமைச்சர் திரு. சவான் அவர்கள் எடுத்துரைத்தாரேயன்றி வேறு விளக்கங்கள்